காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 12 வியாழக்கிழமை 28.11.2019 கதிர் 23




# ஒன்று திரண்டு தமிழினம் வீரமறவர்களுக்கு அஞ்சலி

## தாயகமெங்கும் நேற்று கொழுந்துவிட்டன சுடர்கள் உறவுகளின் கண்ணீரால் நனைந்தன கல்லறைகள்

யாழ்ப்பாணம், நவ. 28

தாயக விடுதலைக்காகத் தமது இறுதி மூச்சுவரைப் போராடி – களமாடி தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய வீரமறவர்களுக்கு – மாவீரர்களுக்கு – உயிர்க்கொடையாளர்களுக்கு – நாயகர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்களில் உள்ள மாவீரர் கல்லறைகள் நேற்று மாலை கண்ணீரால் நனைந்தன.

பக்கம் 03

**மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பிற இடங்களிலும் நேற்று இடம் பெற்ற நினைவேந்தல் தொடர்பான படங்கள்**

**13,14,15,16**
**ஆம் பக்கங்களில்....**

பக்கங்கள்: 16

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | கார்த்திகை 12 வியாழக்கிழமை 28.11.2019 | கதிர் 23

**இனிது ரகசியம் அல்ல!**

'முதற்கோணல் முற்றிலும் கோணல்' என்பார்கள்.

புதிய ஜனாதிபதியின் ஆரம்ப நடவடிக்கைகள் சில பலராலும் சிலாகித்துப் பாராட்டப்பட்டது.

அரசதிணைக்களங்கள், அலுவலகங்கள், இராணுவ முகாம்களில் தமது பக்கம் 02







# யாழ்.பல்கலைக்கழக மாவீரர் நினைவுத் தூபியில் நேற்று மாலை கொழுந்து விட்டெரிந்தன சுடர்கள்!

## தடைகளைத் தகர்த்து நினைவேந்தலை நடத்தினர் மாணவர்கள்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 28

யாழ். பல்கலைக்கழகத்தின் மாவீரர் நினைவுத் தூபியில் நேற்று மாலை 6.05 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் நாளையொட்டி நேற்றும் இன்றும் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாணவர்கள் உட்செல்ல பல்கலைக்கழக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தத் தடை உத்தரவையும் தாண்டி தற்றுணிவுடன் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். பக்கம் 03

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் மாவீரர் நினைவு





யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத்தமிழ்அரசுக் கட்சியின்தலைமைஅலுவலகத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலைவரும் யாழ். மாவட்ட நாடாளு பக்கம் 03


## கொடிகாமத்தில் நேற்று மாலை உணர்வுவெழுச்சியுடன் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 28

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கான நினைவேந்தல் நிகழ்வு துயிலு பக்கம் 03

## 35 ராஜங்க அமைச்சர்களுடன் நேற்று 3 பிரதி அமைச்சர்களும் பதவியேற்பு



கொழும்பு, நவ. 28

கடுமையான இழுபறிகளுக்குப் பின்னர் இடைக்கால அரசின் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் நியமனம் நேற்று இடம்பெற்றது. 35 இராஜாங்க அமைச்சர்களும் 3 பிரதி அமைச்சர்களும் பத பக்கம் 03

## கோப்பாயில் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் தினம் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

நேற்று மாலை 6.05 மணிக்கு பிரதான ஈகச் சுடர் ஏற்றப்பட்டு நினைவு நிகழ்வு நடை பக்கம் 03

## பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் தீருவிலில் மாவீரருக்கு உறவுகள் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 28

வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற உறவுகள் பொலிஸாரின் பாதுகாப் பக்கம் 03

## கோட்டாபய இன்று புதுடில்லி பயணம்



கொழும்பு, நவ. 28

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நண்பகல் இந்தியாவுக்கான இரண்டு நாள் அரசமுறை பயணத்தை மேற்கொள்கிறார். பக்கம் 03

## தூதர் பதவிகளில் மாற்றம்!

கொழும்பு, நவ. 28

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் நியமனம் பெற்ற தூதுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மீள அழைக்கப்படவுள்ளனர்.

முக்கியமான நாடுகளில் நியமனம் பெற்ற தூதுவர்களுக்குப் பதிலாக புதிய தூதுவர்கள் நியமனம் விரைவில் நடக்கவுள்ளது.

ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் முப்படைகளில் ஓய்வு பெற்ற தளபதிகள் சில நாடுகளின் தூதுவர்களாக நியமனம் பெறவுள்ளனர். (ஐ)

## ஊடகவியலாளரிடம் விசாரணை

கொழும்பு, நவ. 28

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக செயற்பட்ட செய்தி வாசிப்பாளரை சி.ஐ.டி.யினர் விசாரணை செய்துள்ளனர் என மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

சஜித்துக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில் யூடியுப்பில் செய்திவாசித்த சஞ்சய தனுஸ்கவை சி.ஐ.டி.யினர் 8 மணித்தியாலங்கள் விசாரணை செய்துள்ளனர் என அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தனது ஊடகப் பிரிவின் தலைவரான ருவான் பேர்டினான்டெஸ் அடுத்த இலக்கு எனவும் மங்கள சமரவீர தெரிவித்தார். (ஐ)

# சுகாதார அமைச்சின் செயலராக திருமதி சாள்ஸ் நியமிக்கப்பட்டார்



கொழும்பு, நவ. 28

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாக இருந்த திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, எஸ். சிவஞானசோதிக்கு அமைச்சின் செயலாளர் பதவி வழங்கப்படவில்லை.

புதிய அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று வழங்கப்பட்டது.

20 புதிய அமைச்சுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அமைச்சுச் செயலர்களின் பெயர் விவரங்கள் பின்வருமாறு.

★ திருமதி. எஸ்.எம்.மொஹமட் – சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சு

★ ஆர்.டப்ளியூ.ஆர்.பேமசிறி – வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

★ ஜே.ஜே.ரத்னசிறி – நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

★ ரவீந்ர ஹேவாவிதாரன – பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு

★ ஜே.ஏ.ரஞ்சித்–கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு

★ டி.எம்.ஏ.ஆர்.பி.திசாநாயக்க –உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

★ எச்.எம்.காமினி செனெவிரத்ன–பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு

★ டப்ளியு.ஏ.சூலானந்த பெரேரா–தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சு

★ திருமதி. வசந்தா பெரேரா – மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு

★ எம்.எம்.பி.கே.மாயாதுன்னே –துறைமுக மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சு

★ எஸ்.ஹெட்டியாரச்சி–பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

★ பி.ஆரியசிங்க–வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

★ ஏ.எஸ்.எம்.எஸ்.மஹாநாம – மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு

★ திருமதி.ஜே.எம்.சி.ஜயந்தி விஜேதுங்க – சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகள் வள அமைச்சு

★ ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க – காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

★ எம்.பி.டி.யு.கே.மாபா பத்திரன – கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

★ திருமதி.ஆர்.எம்.ஐ.ரத்நாயக்க – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

★ திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ் – சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு

★ என்.பி.மொன்டி ரணதுங்க – சிறிய, நடுத்தர அளவிலான வர்த்தக மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

★ கலாநிதி பிரியத் பந்துவிக்ரம –நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு. (ஐ)

## மட்டக்களப்பில் வெள்ளம்





மட்டக்களப்பு, நவ. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

சில வீதிகளிலும் மழை நீர் ஊடறுத்துப் பாய்வதால் பயணிகள் போக்குவரத்துச் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும், மாவட்டத்திலுள்ள தாழ் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படத்தை வைக்க வேண்டாம் என்று உத்தரவிட்டதிலிருந்து, தமக்கென மேலதிகமாக உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றை ஒழுங்குபடுத்தாமல், உத்தியோகபூர்வ தேவைகளுக்கு ஜனாதிபதி மாளிகையையும், ஜனாதிபதி செயலகத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தமது சொந்த வீட்டில் இருந்து இயங்கத் தீர்மானித்தமை, தான் பயணிக்கும் போது வீதிகளை அதற்காகத் தடை செய்ய வேண்டாம் என்று உத்தரவிட்டமை, தமது ஜனாதிபதி செயலகப் பணியாளர் தொகுதியை இரண்டாயிரத்திலிருந்து இருநூறாகக் குறைத்தமை, ஆக பதினாறு அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவையை நியமித்தமை என்று அவர் மேற் கொண்ட அதிரடி முடிவுகள் அவரது அரசியல் எதிரிகளாலும் கூட மெச்சப்பட்டன.

கடந்த இரண்டொரு தினங்களாகச் சத்தம் சந்தடியில்லாமல் கட்டவிழ்ந்த சில விடயங்கள் பழைய இருண்ட யுக காலம் பற்றிய ஏக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ராஜபக்ஷக்களின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் என்று தெரிவித்து பல்வேறு விடயங்கள் குறித்து கடந்த நான்கரை ஆண்டுகளாகக் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தில் பலரையும் நோண்டி நுங்கெடுத்து விசாரணை செய்துகொண்டிருந்த புலனாய்வு அதிகாரியான சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் நாட்டை விட்டுத் தப்பி சுவிஸில் தஞ்சம் புகுந்தார் என ஒரு செய்தி வெளியானதல்லவா?

அதனை அடுத்து கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் விஸா வழங்கும் பிரிவில் முக்கிய பொறுப்பில் பணியாற்றும் இலங்கையரான பெண் அதிகாரி ஒருவர் பணி முடிந்து வீடு திரும்புகையில் வெள்ளைவானில் கடத்தப்பட்டிருக்கின்றார் என்று நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் பரபரப்புச் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அந்த வானுக்குள் வைத்தே அந்த அதிகாரி 2, 3 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்படிருக்கின்றார்.

அவரது கைத்தொலைபேசியில் இருந்த விடயங்கள் அனைத்தும் கடத்தியோரால் பலவந்தமாக உருவப்பட்டுள்ளன.

வேறு யார், யார் எல்லாம் அரசியல் தஞ்சத்துக்கான விஸாவுக்கு தூதரகத்தை நாடியுள்ளனர் என்பதிலிருந்து பல விடயங்கள் குறித்து அச்சுறுத்தி விசாரிக்கப்பட்ட பின்னர், அவரை வீதியோரத்தில் நெட்டித் தள்ளிவிட்டு வெள்ளை வான் பறந்து விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் தான் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படாதவர்கள் என்ற பேரில் எழுநூறு புலனாய்வாளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்கா விமான நிலைய குடியகல்வு, குடிவரவுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சுவிஸ் தூதரக ஊழியருக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தை அடுத்து நேற்று கொழும்புக்கான சுவிஸ் தூதர் இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவை சந்தித்தார்.

இதேசமயம், சுவிஸ் தலைநகர் பேர்னில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தூதுவர் நேற்று சுவிஸ் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்த விடயம் குறித்து அவரிடம் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

தமது தூதரகப் பணியாளர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, அச்சுறுத்தி விசாரிக்கப்பட்டு, அவரிடமிருந்த தகவல்கள் பலவந்தமாக உருவப்பட்டுள்ளமையை சுவிஸ் அரசு சிறிய விடயமாகக் கருதவில்லை எனத் தெரிகின்றது.

அதேநேரம், தென்னிலங்கையில் முக்கிய சமூக ஊடகங்கள் புலன் விசாரணையாளர்களினால் துளைத்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு நெருக்கமான சமூக ஊடகம் ஒன்று பிய்த்து உதறப்பட்டுள்ளது. அதன் பொறுப்புள்ள அதிகாரிகள் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

மற்றொரு 'யூ ரியூப்' ஊடகத்தின் செய்தியாளர்களும் புலனாய்வாளர்களால் துளைத்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவை புதிய ஜனாதிபதிக்கும், அவரது அரசுக்கும் நல்ல ஆரம்பங்கள் அல்ல.

கீழே பணியாற்றுபவர்கள் யுத்த கால சிறப்புரிமை தங்களுக்கு மீளக் கிட்டியிருப்பதாகக் கருதித் தமது கைவரிசையைக் காட்டத்தொடங்கினால் கடைசியில் கெட்ட பெயரும் இழப்பும் புதிய ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும்தான்.

ஆரம்பத்திலேயே திருத்தாவிட்டால், இனித் திருந்த வாய்ப்பில்லை என்ற நிலைமைதான் வந்து விடும்...!

– மின்னல் –

## வவுனியாவில் 25 பேருக்கு எயிட்ஸ் நோய்!

வவுனியா, நவ. 28

வவுனியாவில் கடந்த 16 வருடங்களில் 25பேர் எயிட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி கு.சந்திரகுமார் தெரிவித்தார்.

எயிட்ஸ் நோய் தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

உலக எயிட்ஸ் தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவிலும் பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவினரால் எயிட்ஸ் தினம் நினைவு கூரப்படுகிறது.

சமூகங்கள் நிலைமையை மாற்றலாம் என்ற தொனிப்பொருளில் இம்முறை உலக எயிட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை 3,507 எயிட்ஸ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2,391 ஆண்களும், 1,116 பெண்களும் காணப்படுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 25 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு நோயாளி இனம் காணப்பட்டுள்ளார். அவர்களில் 12பேர் மாத்திரமே உயிருடன் இருக்கின்றனர். அவர்களுக்கான சிகிச்சைகள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவைப் பொறுத்தவரை இங்கு நோய்த்தொற்று ஏற்படுவதற்கு பிரதான காரணமாக விபசாரம் காணப்படுகின்றது. வேறு மாவட்டங்களில் இருந்தும் விபசாரத் தொழிலாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். எனவே எயிட்ஸ் நோய் தொடர்பாக இளைஞர்கள், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு தெளிவுபடுத்தல்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

வவுனியா வைத்தியசாலையில் நோயாளர்களாக அனுமதிக்கப்படும் சிலருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. தாமாகவும் சிலர் வருகைதந்து பரிசோதனையை மேற்கொள்கின்றனர்.

எனவே வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவில் பொதுமக்கள் தாமாகவே வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களது இரகசியங்கள் பாதுகாக்கப்படும்–என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



## யாழ். பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், யாழ். பல்கலைக்கழக வளாகத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைவரையும் வெளியேறுமாறு நிர்வாகம் பணித்தது. அவ்வாறிருக்கையில் நேற்று மாலை பல்கலைக்கழக நினைவுத் தூபியில் சுடர்கள் கொழுந்துவிட்டெரிந்தன.

பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை ஒருவர் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரேற்றலைத் தொடர்ந்து மாவீரர் பாடல் இசைக்க கலந்துகொண்ட மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் ஈகச் சுடர்களையேற்றி அஞ்சலி செய்தனர்.

அதேவேளை, நேற்று முற்பகலும் தடைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் வந்த மாணவர்கள் மாவீரர் நினைவுத் தூபியில் மலர் தூபி அஞ்சலி செலுத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

இதன்போது நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு ஈகச்சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ஐ-07)

## பாதுகாப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் கெடிபிடிகளுக்கு மத்தியில் உணர்வுபூர்வமாக தீபம் ஏற்றி - மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நேற்று மாலை 6.05 மணிக்குக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தச் சென்ற உறவுகள் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அங்கு ஒலிபெருக்கி இயக்குவதற்கும் கொடிகள் கட்டுவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

அஞ்சலி செலுத்தச் சென்ற உறவுகள் சிவில் உடையில் நின்ற புலனாய்வாளர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட்டனர். எனினும் பாதுகாப்புக் கெடிபிடிகளுக்கு மத்தியில் உறவுகள் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (ஐ-07)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தில் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்தை சந்திக்கவுள்ளமையுடன், இந்தியப் பிரதமருடன் அவர் இரு தரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஏனைய இந்தியப் பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது வாகும்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க, திறைசேரி செயலாளர் சஜித் ஆட்டிகல, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோரும் ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## 35 ராஜங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு நேற்றைய இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் நியமனத்தில் பதவி வழங்கப்படவில்லை.

கடந்த திங்கட்கிழமை நடைபெறும் என முன்னர் கூறப்பட்டிருந்த இராஜாங்க, பிரதி அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வு இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களில், காமினி லொக்குகே, ரோகித அபேகுணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே, கெஹெலிய ரம்புக்வெல்ல, மகிந்த யாப்பா அபேவர்தன, காஞ்சன விஜேசேகர, சனத் நிஷாந்த, கனக ஹேரத், ரொ-ஷான் ரணசிங்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவண்ண, துமிந்த திசநாயக்க ஆகியோரும் உள்ள டங்கியுள்ளனர் .

இராஜாங்க அமைச்சர்கள்

★ சமல் ராஜபக்ஷ - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

★ வாசுதேவ நாணயக்கார - நீர் வளங்கள் வசதிகள் இராஜாங்க அமைச்சர்.

★ காமினி லொக்குகே - நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ ஜோன் செனவிரட்ன - பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ மஹிந்த சமரசிங்க - பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

★ சி.பி.ரத்நாயக்க - புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர்.

★ சுசில் பிரேம ஜயந்த - சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர்.

★ மஹிந்த யாப்பா அபேவர்தன - நீர்ப்பாசன, கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ எஸ்.பி. திஸாநாயக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன - தகவல் தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்.

★ சுசந்த புஞ்சிநிலமே - சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறை இராஜாங்க அமைச்சர்.

★ அநுர பிரியதர்ஷன யாப்பா - உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர்.

★ பிரியங்கர ஜயரத்ன - சுதேச வைத்திய சேவைகள் இராஜாங்க அமைச்சர்.

★ ரஞ்சித் சியம்பலாப்பிடிய - கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்.

★ மஹிந்தானந்த அளுத்கமகே - மின்சக்தி இராஜாங்க அமைச்சர்.

★ துமிந்த திசாநாயக்க - இளைஞர் விவகாரம் இராஜாங்க அமைச்சர்.

★ தயாசிறி ஜயசேகர - கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.

★ லசந்த அழகியவண்ண - அரச முகாமைத்துவ கணக்கீடு இராஜாங்க அமைச்சர்.

★ கெஹெலிய ரம்புக்வெல்ல - முதலீட்டு மேம்பாடு இராஜாங்க அமைச்சர்.

★ அருந்திக பெர்னாண்டோ - சுற்றுலா மேம்பாடு இராஜாங்க அமைச்சர்.

★ திலங்க சுமதிபால - தொழில்நுட்ப புத்தாக்க இராஜாங்க அமைச்சர்.

★ மொஹான் பிரியதர்ஷன - மனித உரிமைகள், சட்ட சீர்திருத்த இராஜாங்க அமைச்சர்.

★ விஜித பேரகொட - மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

★ விதுர விக்கிரமநாயக்க - கமநல இராஜாங்க அமைச்சர்.

★ செஹான் சேமசிங்க - அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர்.

★ கனகஹேரத் - துறைமுக அபிவிருத்தி இராஜாங்க அமைச் சர்.

★ ரொஷான் ரணசிங்க - மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ ஜானக்க வக்கும்பர - ஏற்றுமதி, கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்.

★ திலும் அமுனுகம - போக்குவரத்து சேவைகள் மற்றும் முகாமைத்வுவ இராஜாங்க அமைச்சர்.

★ லொஹான் ரத்வத்த - நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

★ விமலவீர திஸாநாயக்க - வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர்.

★ ஜயந்த சமரவிக்ரம - சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்.

★ சனத் நிஷாந்த பெரேரா - கடற் தொழில் மற்றும் நன்னீர் மீன்பிடி இராஜாங்க அமைச்சர்.

★ தாரக்க பாலசூரிய - சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

### பிரதியமைச்சர்கள்

★ நிமால் லான்சா - சமூக வலுவூட்டல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சர்.

★ காஞ்சன விஜேசேகர - கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் பிரதியமைச்சர்

★ இந்திக அனுருத்த - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர். (ஐ)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா தலைமையில் வழமைபோன்று மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் அறப் போரில் ஆகுதியாகிய வீர மறவர்களுக்காகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. முதற் சுடரை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

இந்த நினைவேந்தலில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில்லத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலைய வளாகத்தில் இடம் பெற்றது.

நினைவேந்தலில் முதன்மைச் சுடரை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் குடும்பங்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# யாழ்தேவி தடம் புரண்டதால் வடக்கு ரயில் சேவை பாதிப்பு





காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு பயணித்த யாழ்தேவி ரயில் தடம் புரண்டதால் வடக்குக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என ரயில்வே கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்கமுவ - அம்பன்பொல ரயில் நிலையங்களுக்கிடையிலேயே யாழ்தேவி ரயில் நேற்றுப் பிற்பகல் தடம் புரண்டுள்ளது. எனினும் பயணிகளுக்குப் பாதிப்பு என அறிவிக்கப்படவில்லை.

தடம்புரண்டுள்ள ரயில் பெட்டிகளைச் சீராக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். இந்நிலையில் வடக்குக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# வற் வரி குறைப்பு

பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் வரி (வற் வரி) 15 வீதத்திலிருந்து 8 வீதமாகக் குறைக்கப்பட்டதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். ஜனாதிபதி தலைமையில் நேற்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மஹிந்த கூறியுள்ளார்.

மேலும் தேச கட்டட வரி உட்பட பல வரிகளை நீக்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபயவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதை போல டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் வற் வரியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை நேற்றைய கூட்டத்தின்போது புதிய வரிகளைச் சீர்திருத்தவும், அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்கவும் ஜனாதிபதி கோட்டாபய அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒன்று திரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு - மீண்டும் ராஜபக்ஷாக்களின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் வடக்கு - கிழக்கில் எதற்கும் அஞ்சாமல் மாவீரர் நாள் நினைவேந்தல் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

கடந்த 4 வருடங்களைப் போலல்லாமல் வடக்கு - கிழக்கில் இம்முறை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தியபோதிலும் அந்தத் தடைகளை மக்கள் தகர்த்தெறிந்துவிட்டு துணிவுடன் துயிலும் இல்லங்களுக்குச் சென்று வீரமறவர்களுக்குச் சுடரேற்றினர்.

தாயகத்தில் உள்ள அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் நேற்று மாலை சம நேரத்தில் சுடர்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் நேற்று மாவீரர் நாள் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

துயிலும் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. மாவீரர் எழுச்சிக் கீதங்கள் காலையிலிருந்து ஒலிக்கவிடப்பட்டிருந்தன.

மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு, 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நிகழ்வு நடைபெற்றது. மாவீரர்கள் நினைவான ஈகச் சுடர்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. அதனைத் தொடர்ந்து, மாவீரர் துயிலும் இல்லப்பாடல் ஒலிக்கவிடப்பட்டது. பாடல் இசைக்கப்பட்டபோது, மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் உயிர்நீத்த தமது சொந்தங்களை நினைத்துக் கதறி அழுதனர். கல்லறைகள் இருந்த இடங்களைக் கட்டியணைத்து ஒப்பாரி வைத்தனர். அந்தக் காட்சி துயிலும் இல்லங்களில் கூடியிருந்தவர்களை நிலைகுலைய வைத்தது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஐக்கியம் சாத்தியமா?

அரசியல் நிர்ப்பந்தங்கள், கட்டாயங்கள், நெருக்குவாரங்கள், அழுத்தங்கள் சில சமயங்களில் புதிய கூட்டுகளுக்கும் இணைவுகளுக்கும் வழி செய்து விடுவதுண்டு.

அத்தகைய ஓர் அரசியல் இக்கட்டு இலங்கையில் தமிழர் தரப்புக்கு ஏற்பட்டிருப்பது கண்கூடு.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஒரு சக்தியாக ஒன்றுபட்டு பேரெழுச்சி கொண்டிருக்கிறது.

அதுவும், சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான ஒன்றுபட்ட சக்தியாய் அது பேருருக் கொண்டு நிற்கின்றது.

இப்படி விஸ்வரூபம் கொண்டுள்ள அரசியல் தரப்பு இலங்கைக்கும், இந்தத் தீவின் சிறுபான்மை இனங்களுக்கும் புதியதே அல்ல.

அதிலும் இந்தத் தீவில் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமது தேசியத்தை – தேசத்தை – சுதந்திரத்தை – மீட்பதற்காக ஆயுத வழியிலும், அஹிம்சை வழியிலும் உலகமே வியக்கும் வகையிலான விடுதலைப் போராட்டங்களை நடத்திய பின்னரும், தோற்றுப்போய் கையாலாகத்தனத்துடன் அடங்கிப்போய் நிற்கும் தமிழர் தரப்புக்கு, மறுபக்கத்தில் மீள் எழுச்சி கொண்டுள்ள சிங்களத் தரப்புப் புதியதல்ல.

தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை ஆயுத முனையில் அடக்குகின்றோம் என்ற பெயரில் இத்தரப்புகள் புரிந்த அட்டூழியம் தமிழர்களைப் பொறுத்தவரை மறக்கவொண்ணாதது.

அவை இழைத்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை எல்லாம் இன்னுமே விசாரிக்கப்படவில்லை. அந்த விடயத்தில் பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவில்லை. நடந்த உண்மைகள் கண்டறியப்படவில்லை. மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. பாதிப்புகளுக்கு நிவாரணம் கொடுக்கப்படவில்லை. மொத்தத்தில் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட பெருங் கொடூரங்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேயில்லை.

இந்தச் சூழலில்தான் அவற்றை முன்னெடுத்த தரப்புகள் என்று கூறப்படும் அதிகார வர்க்கம் ஜனாதிபதித் தேர்தல் மூலம் மீண்டும் செல்வாக்கு நிலைக்கு வந்திருக்கின்றது.

அதுவும் கொஞ்ச நஞ்ச வாக்குகள் வித்தியாசத்தில் அல்ல. மில்லியனுக்கும் அதிகமாக வாக்குகள் வித்தியாசத்தில்.

இதுவரைத் தான் இழந்திருந்த வாக்குகளையும் தாண்டி பெரும் எண்ணிக்கையான வாக்குகளை பௌத்த, சிங்களத் தீவரவாதப் போக்கைப் பிரதிபலித்தமை மூலம் ராஜபக்ஷவின் ஆட்சிப் பீடம் சுவீகரித்து மீண்டும் அதிகாரப் பிடிக்கு வந்துள்ளது. அதுவும் தாராளமான வசதி கொண்ட ஆதவுடன்.

அந்தப் பேரினவாத ஆளுமை சக்தியின் வலிமை வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இதே மாதிரிப் பலத்துடன் அதற்குக் கிட்டுமானால் இந்தத் தீவில் சிறுபான்மையினரின் நிலைமை அதற்குப் பின்னர் அதோ கதிதான்.

இப்போது, ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மற்றும் அதன் வாக்களிப்பு வீதங்களைப் பார்க்கும் போது மிக விரைவில் – இரண்டு, மூன்று மாதங்களில் நடக்கக் கூடிய – ஒரு பொதுத் தேர்தலில் அந்த சக்திகளின் கைகள் முன்னெப்போதும் இல்லாதவாறு வீரியம் அடையும் என்பது தெளிவு.

அந்தத் தரப்பு நாடாளுமன்றத்தில் தனித்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற முடியாவிட்டாலும், இப்போதுள்ள, கருத்துகளின்படி அது நாடாளுமன்றத்தில் அந்த எண்ணிக்கையை எட்டக்கூடிய வகையில் நெருங்கி வரும் வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதாகத் தெரிகின்றது.

அதுதான் நிலைமை என்றால் சிறுபான்மையினருக்கு – குறிப்பாகத் தமிழருக்கு – அது பெரும் ஆபத்தாக முடியும் விடயம்தான்.

தமிழர்கள் இந்தத் தீவில் – தமது தாயகம் பாரம்பரிய பூமியில் – தம் இருப்பையே தொலைந்து விட்டு அந்தரிக்க வேண்டிய சூழல் – கட்டாயம் – நம் மீது சுமத்தப்படும் நிலைமை உருவாகும்.

அத்தகைய மோசமான நெருக்கடியை எதிர்கொள்வதற்காகத் தமிழினம் ஒன்று படவேண்டும் என்ற கோரிக்கையை – பகிரங்க வேண்டுகோளை – முன் வைத்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

ஐக்கியம் முக்கியம். அதுவும் துவண்டு போயிருக்கும் தமது தமிழினத்துக்குத் தலைநிமிர ஒற்றுமை மிக முக்கியமானது.

ஆனால் ஐக்கியம் என்பது மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலை அல்ல.

அதற்கு, தனிப்பட்ட விரோதங்களை – குரோதங்களை – பகைமைகளை மறந்து, இனமானம் என்ற ஒரே குறிகோளை மட்டும் வைத்து செயலாற்றும் நேர்மைத்தனம் அவசியம். பழையவற்றை மறந்து, சகலரையும் அரவணைக்கும் தாராள மாண்பு கட்டாயமானது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்தவரையும் மதிக்கும் உயரிய மாண்பும், உச்ச விட்டுக் கொடுப்பும் மிக மிகக் கட்டாயமானவை.

பழைய இணக்கங்கள் மறைந்தமைக்கான காரணங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைக் களைய முயல வேண்டும்.

இவற்றை எல்லாம் செய்யத் தயார் என்றால், தான் பொது இணக்கப்பாட்டுக்கான அழைப்பை விடுப்பதோ, அதன்படி செயற்படுவதோ சாத்தியம்.

தமிழர் தரப்புகள் தங்கள் நெஞ்சைத் தொட்டு தமக்குள் பேச வேண்டிய இந்த முக்கிய விடயங்கள் குறித்து முதலில் ஆராய வேண்டும். அதன் பின்னர்தான் ஒன்றிணையும், ஐக்கியமும் சாத்தியம்.

# நல்லூரில் மாவீரர்களுக்கு அஞ்சலி









யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயம் முன்பாகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இந்த நிகழ்வு நேற்று மு.ப. 10 மணியளவில் நடைபெற்றது. (ஐ)

# ராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியில் கொடிகாமத்திலும் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், நவ. 28

கொடிகாம் மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ள பகுதியில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகச் சுடரேற்ற முற்பட்டபோது இராணுவத்தினர் அதனைத் தடுத்தி நிறுத்தினர். ஆயினும் பின்னர் இராணுவ முகாமுக்கு அருகில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்,கே.சிவாஜிலிங்கம் தலைமையில் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ள பகுதியில் சுடரேற்ற முற்பட்டபோது, இராணுவ முகாமில் இருந்து வந்த இராணுவத்தினர் அந்தப் பகுதியில் சுடரேற்ற வேண்டாம் எனக் கூறித் தடுத்து நிறுத்தினர்.

அதன் பின்னர் முகாமுக்கு அருகில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த காணியில் தற்போது படையினர் இராணுவ முகாமை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(காரத்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்.
16
2019

வடமாகாண மரம் நடுகை மாதம்
கார்த்திகை - 2019
“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”
ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

நாளை
29.11.2019
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: மூலம் மு.ப 10.01 வரை
திதி : திருதியை மு.இ 7.55 வரை
இராகுகாலம் : 10.43 – 12.13
சுப நேரம் : 6.13 – 7.43

# அமைச்சுப் பதவி பொறுப்பேயன்றி சலுகைகள் அல்ல!

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள் தமக்குக் கிடைத்த பதவிக்கான சலுகைகள் அல்ல. அவற்றை மிக முக்கியத்துவம் மிக்க பொறுப்பாகக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும்வகையிலேயே அமைச்சுப் பதவிகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வின் இறுதியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தநிகழ்வுநேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது 35 இராஜாங்க அமைச்சர்களும் 3 பிரதி அமைச்சர்களும் பதவிப்பிரமாணம்செய்துகொண்டனர்.

அங்கு ஜனாதிபதிமேலும்தெரிவிக்கையில் –

பொதுமக்கள் பெரியளவிலான ஆணையைவழங்கியுள்ளமைபெரும் எதிர்பார்ப்புடனேயே ஆகும். அதனை நினைவில் நிறுத்திச் செயற்படவேண்டும்.

இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சுகளுக்கான துறைகள் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளன. எமது கொள்கைப் பிரகடனத்துக்கு ஏற்ப இது இடம் பெற்றுள்ளது.

பதவிகளின் சலுகைகளைக் கருத்திற் கொள்ளாது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் பல ஆண்டுகளின் பலனாக மக்களின் எதிர்பார்ப்புகள் இனங்காணப்பட்டுள்ளன.



ரயில் சேவைகளை அபிவிருத்தி செய்வது மற்றும் அவற்றைச் செயற்திறன் மிக்கதாக கொண்டு நடத்துவது மக்களின் பிரதான தேவையாக உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

அதேபோல் நாட்டின் வறுமை நிலையை நீக்க அவதானம் செலுத்த வேண்டும்.

அரச துறைகளில் வினைத்திறன் அற்ற போக்குகள் இல்லாது செய்யப்படும். இதில் அமைச்சர்களுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு தமது பணிகளை முன்னெடுப்பதற்கு அமைச்சர்கள் சந்தர்ப்பம், ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அரச துறையை மேம்படுத்துதல், பொது மக்களுக்கு சேவை செய்வதற்கான சந்தர்ப்பம் புதிய யுகத்தை உருவாக்குதல் ஆகியன தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த வேலைத்திட்டங்களுக்கு அமைச்சர் பதவி இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் – என்றார். (ஐ)

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக அங்கஜன் எம்.பி நியமனம்



யாழ்ப்பாணம், நவ. 28

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் நேற்று 35 இராஜாங்க அமைச்சர்கள், 3 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கஜன் இராமநாதன், சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்டோருக்குப் பதவிகள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாகவும் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி நினைவேந்தல்







யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாகவும் நேற்றுக் காலை மாவீரர்களுக்கு மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக இராசபாதை வீதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த காணியில் தற்போது படையினர் இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ - 07)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாளை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாள், கிளாலி, Topical Lank ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

உளுக்குளம், மறக்கறம்பளை, கணேசபுரம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

## மராட்டியத்தில் அதிரடி அரசியல் திருப்பம் தொடர்கின்றது

# 3 நாள்களில் பதவி விலகினார் பா.ஜ.க. முதல்வர் சிவசேனை கூட்டணி இன்று ஆட்சி அமைக்கிறது!

### உத்தவ் தாக்ரே புதிய முதலமைச்சர்; எம்.எல்.ஏக்கள் நேற்றுப் பதவியேற்பு






மூன்று கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் முதலமைச்சராக சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே தேர்ந்தெடுக்கப்பட்ட போது அதற்கு அவர் நன்றி தெரிவித்த சமயம்.

மும்பை,நவ.28

மராட்டியத்தில் அதிரடி அரசியல் திருப்பம் தொடர்கின்றது. சனிக்கிழமையன்று திடுதிப்பென முதலமைச்சராகப் பதவியேற்ற பாரதீய ஜனதாக் கட்சி யின் தேவேந்திர பட்னாவிஸ் தமக்குப் பெரும் பான்மை இல்லை என்ற நிலையில் நேற்று முன் தினம் மாலையில் பதவி விலகினார்.

இதையடுத்து, சிவசேனா தலைவர் உத்தவ் தாக்ரே மரட்டியத்தின் அடுத்த முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டார். தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் இன்று முதலமைச்சராக உத்தவ் தாக்ரே பதவியேற்க உள்ளார்.

மராட்டியத்தில் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு பா.ஜ.க. – சிவசேனா கூட்டமைப்பு வென்றது. ஆனால் ஆட்சியைப் பகிர்வதில் இரு தரப்புகளிடையேயும் முரண்பாடு முற்றியமையால் கூட்டணி முறிந்தது.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் கைகோர்த்த சிவசேனா, ஆட்சி அமைக்கத் தீவிரம் காட்டியது.

இதற்கு மத்தியில், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சரத்பவார் அண்ணன் மகனுமான அஜித் பவார், திடீரென பா.ஜ.கவுடன் கைகோர்த்தார். இதையடுத்து, சனிக்கிழமை காலை, முதல் மந்திரியாக தேவேந்திர பட்னாவிஸும், துணை முதல் மந்திரியாக அஜித் பவாரும் பதவியேற்றுக் கொண்டனர்.

ஆட்சி அமைக்க பா.ஜ.கவுக்கு அழைப்பு விடுத்த ஆளுநருக்கு எதிராகவும், தேவேந்திர பட்னாவிஸ் பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிட வலியுறுத்தியும் சிவசேனா கூட்டணியினர் உச்ச நீதிமன்றத்தில் உடனடியாக வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கில் நேற்று முன்தினம் உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், தேவேந்திர பட்னாவிஸ் நேற்று மாலை 5 மணிக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று கட்டளையிட்டது.

ஆனால்திடீர்திருப்பமாக, துணை முதல்வர் பதவியில் இருந்து அஜித் பவார் நேற்று முன்தினம் மாலை பதவி விலகினார். தொடர்ந்து தேவேந்திர பட்னாவிஸும் பதவி விலகினார். அஜித் பவார் விலகியதால், பெரும்பான்மை தங்களுக்கு இல்லை என்பதாகவும் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்தார்.

இதையடுத்து, சிவசேனா தலைவர் உத்தவ் தாக்ரே மரட்டியத்தின் அடுத்த முதலமைச்ச ராகத் தேர்வு செய்யப்பட்டார். தேசியவாத காங்கிரஸ், காங் கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் இன்று முதல்வராக உத்தவ் தாக்ரே பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில், சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற எம். எல்.ஏக்கள் பதவியேற்பதற்காக நேற்று அம்மாநில சட்டப்பேர வையின் சிறப்புக் கூட்டம் கூடியது. இதில், தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்கள் அனைவரும் பதவியேற்றனர். உறுப்பினர்களுக்கு இடைக்கால சபாநாயகர் காளிதாஸ் கெலம்ப்கர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மராட்டியத்தில் சட்டசபை தேர்தலை தொடர்ந்து, ஆட்சி அமையாமல் நிலவிய அரசியல் குழப்பம் காரணமாக புதிய சட்டசபைக்கு தேர்வு செய்யப்பட்ட 288 எம்.எல். ஏ.க்கள், ஏறத்தாழ ஒருமாதத்திற்கு பிறகு நேற்றுப் பதவியேற்றுள்ளனர்.

(உ)

# குடும்பத்தவரின் உருக்கமான பேச்சால் தாய்க் கட்சிக்கு மீண்டார் அஜித் பவார்

### தனிமரமாய்த் தவித்தவரை அரவணைத்தது உறவுகள்



சரத் பவார் மகள் சுப்ரியாவுடன் அஜித் பவார்



சரத் பவார் – அஜித் பவார்

சரத்பவார் மனைவி, மகள், மருமகன் உள்பட குடும்பத்தினரின் உருக்கமான பேச்சால் அஜித் பவார் துணை முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்து கட்சிக்கு திரும்பியதாக தகவல் வெளியாகி உள்ளது.

மராட்டிய மாநில அரசியலில் மிகப்பெரிய பரபரப்பையும், குழப்பத்தையும் தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான அஜித் பவார் கடந்த சனிக்கிழமை ஏற்படுத்தினார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியில் சரத்பவாருக்கு அடுத்த இடத்தில் அஜித்பவார் இருந்து வந்தார். சரத்பவாருக்கு பிறகு தேசியவாத காங்கிரஸ் கட்சியை கட்டுப்படுத்துவதில் அவருக்கும், சரத்பவாரின் மகள் சுப்ரியாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாக கூறப்பட்டு வந்தது.

இத்தகைய சூழ்நிலையில் கடந்த சனிக்கிழமை அவர் திடீரென பாரதீய ஜனதா கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தமை, தேசியவாத காங்கிரஸில் உள்ள எல்லா தலைவர்களிடமும் ஜீரணிக்க முடியாத அதிர்ச்சியை ஏற்படுத்தியது. புனே மாவட்டத்தில் உள்ள பாராமதி தொகுதியில் இருந்து 1லட்சத்து 65 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவர் இப்படி ஒரு முடிவை எடுப்பார் என்று தொகுதி மக்களும் எதிர்பார்க்கவில்லை.

கடந்த சனிக்கிழமை அதிகாலை அவர் துணை முதலமைச்சராகப் பதவி ஏற்ற போது அவருக்கு ஆதரவாக 29 தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்றனர் என முதலில் தகவல் வெளியானது. பிறகு அது 11 ஆக குறைந்தது. அதன் பிறகு நான்கே நான்கு எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே அவருடன் இருந்தனர்.

அந்த 4 எம்.எல்.ஏ.க்களையும் அவர் தனி இடத்தில் தங்க வைத்து இருந்தார். கடந்த திங்கட்கிழமை அந்த நான்கு பேரும் சொல்லாமல் கொள்ளாமல் அஜித்பவாரிடம் இருந்து விலகி சரத்பவார் பக்கம் ஓடி விட்டனர். இதன் காரணமாக தன்னை ஆதரிக்க ஒரு எம்.எல்.ஏ.க்கள் கூட இல்லாத நிலையில் அஜித்பவார் தனி மரம் ஆனார். அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது கூட புரியாத, தெரியாத நிலையில் அவர் தவிக்க நேரிட்டது. 'அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாக' குடும்பத்திலும் அவரது முடிவு பிளவை ஏற்படுத்தி விட்டதாக வருத்தங்கள் தோன்றின.

தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இருந்து அஜித் பவாரை நீக்கி விட்டார் என சரத்பவார் அறி வித்து இருந்தார். ஆனால் அதற்கான நடவடிக் கைகளை அவர் எடுக்காமல் இருந்தார். இந்த நிலையில் அஜித்பவாரை மீண்டும் குடும்பத்துடன் இணைக்கும் பணிகளும் ரைகசியமாக நடந்து வந்தன.

(07 ஆம் பக்கம் பார்க்க)

# மராட்டிய ஆளுநரைச் சந்தித்தார் முதலமைச்சராகும் உத்தவ் தாக்ரே

*மும்பை,நவ.28*

*மராட்டிய ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரியை முதலமைச்சராகப் பதவியேற்க உள்ள உத்தவ் தாக்ரே சந்தித்தார்.*

*மராட்டியத்தில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்கின்றன. சிவசேனா தலைவர் உத்தவ் தாக்ரே முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.*

*இன்று மாலை 6.40 மணிக்கு சிவாஜி பார்க்கில் நடைபெறும் பதவியேற்பு விழா நிகழ்ச்சி*



*யில் மராட்டிய முதல் மந்திரியாக உத்தவ் தாக்ரே பதவியேற்க உள்ளார்.*

*இந்தச்சூழலில், மரட்டிய ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரியை உத்தவ் தாக்ரே மற்றும் அவரது மனைவி ராஷ்மி தாக்ரே ஆகியோர் நேற்றுக் காலை சந்தித்தனர். தாக்ரே குடும்பத்தில் இருந்து முதல் மந்திரியாக பதவியேற்கும் முதல் நபர் உத்தவ் தாக்ரேதான் ஆவார்.*

# மாலியில் 2 ஹெலிகள் மோதல்; பிரான்ஸ் வீரர்கள் 13 பேர் பலி!



பமாக்கோ,நவ.28

மாலியில் இராணுவ ஹெலிக் கொப்டர்கள் மோதி நேர்ந்த விபத்தில் பிரான்ஸ் வீரர்கள் 13 பேர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் அந்த நாட்டின் வடக்கு பகுதியில் இருக்கும் பல்வேறு நகரங்களைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு பயங்கரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்கும் முயற்சியில் மாலி ராணுவத்துக்கு ஆதரவாக பிரான்ஸ் இராணுவம் 2013ஆம் ஆண்டு முதல் அங்கு களம் இறங்கி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்காக ஆயிரக்கணக்கான பிரான்ஸ் இராணுவ வீரர்கள் மாலியின் வடக்குப் பகுதியில் முகாமிட்டு உள்ளனர்.

இந்த நிலையில் திங்க என்று பிரான்ஸ் வீரர்கள் வழக்கமான ரோந்து பணிக்காக 2 ஹெலிக்கொப்டர்களில் புறப்பட்டுச் சென்றனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் 2 ஹெலிக் கொப்டர்களும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன.

இந்தக் கோர விபத்தில் இராணுவ உயர் அதிகாரிகள் ஐவர் உள்பட 13 வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே ஹெலிக்கொப்டர் விபத்தில் பலியான இராணுவ வீரர்களுக்கு பிரான்ஸ் அதிபர் மெக்ரான் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

# சிலியில் படையுடன் மோதலில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள்



சிலியில் போராட்டக்காரர்கள் பாதுகாப்பு வாகனங்களைத் தாக்கி, இராணுவத்தினருடன் மோதலில் ஈடுபட்டனர்.

மெட்ரோ ரயில் கட்டணம் உயர்த்தப்படுவதாக வெளியான அறிவிப்பை தொடர்ந்து தொடங்கிய போராட்டம் தற்போது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டாவது மாதமாக நீடித்து வருகிறது.

இந்நிலையில் போராட்டங்களை கலைக்க இராணுவம் தண்ணீரைப் பீய்ச்சியடித்த போது, போராட்டக்காரர்கள் கேடயம் போன்ற பொருள்களைப் பயன்படுத்தித் தங்களைப் பாதுகாத்து கொண்டமையோடு, கற்கள் மற்றும் கையில் கிடைக்கும் பொருள்கள் அனைத்தையும் இராணுவத்தினர் மீது வீசிப் பதில் தாக்குதல் நடத்தினர்.

# பக்தாத்தில் அடுத்தடுத்து மூன்று குண்டு வெடிப்புகள்

## அறுவர் பலி; 17 பேர் படுகாயம்



பாக்தாத்,நவ. 28

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அடுத்தடுத்து நிகழ்ந்த 3 குண்டு வெடிப்புகளில் சிக்கி 6 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 17 பேர் படுகாயமடைந்தனர்.

பாக்தாத் நகரில் உள்ள அல் – சாப், அல் – பையா மற்றும் அல் – பலாதியாத் ஆகிய பகுதிகளில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் நிரம்பிய வாகனங்கள் வெடித்துச் சிதறின. மக்கள் கூட்டம் நிறைந்த பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இது குறித்து பாக்தாத் நகர காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# குடும்பத்தவரின் உருக்கமான பேச்சால்....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரத்பவாரின் அண்ணன் மகன் தான் அஜித்பவார். எனவே சரத்பவாரின் மனைவி பிரதீபா, மகள் சுப்ரியா, மருமகன் சதானந்த சுலே ஆகிய மூவரும் தொடர்ந்து அஜித்பவாருடன் பேசி வந்தனர். குறிப்பாக சரத்பவாரின் மனைவி பிரதீபா இடைவிடாமல் அஜித் பவாரிடம் பேசியபடி இருந்தார்.

ஒரு கட்டத்தில் பிரதீபாவின் உருக்கமான பேச்சு அஜித்பவாரின் மனதை கரைத்தது. தனி மரமாக நின்ற அவர் அரசியலிலும், குடும்பத்திலும் மிகப்பெரிய தவறு செய்து விட்டோம் என்பதை உணர்ந்தார். என்றாலும் எப்படி மீண்டும் குடும்ப உறுப்பினர்களைச் சந்திப்பது என்ற தயக்கம் அவரிடம் இருந்தது.

அந்தத் தயக்கத்தை சரத்பவாரின் மனைவி பிரதீபா தனது உருக்கமான பேச்சுக்கள் மூலம் நிவர்த்தி செய்தார். பிரதீபா மீது எப்போதும் அஜித்பவார் மிகப்பெரிய மரியாதையை காட்டுபவர். பிரதீபா உத்தரவுகளை கடந்த காலங்களில் அப்படியே கடைப் பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே சித்தியின் (பிரதீபா) உருக்கமான பேச்சை அஜித்பவாரால் மீற முடியவில்லை. துணை முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வீட்டுக்கு வா என்று பிரதீபா உத்தரவிட்டதும் அஜித்பவார் அதை அப்படியே ஏற்று நேற்று மதியம் செயல்பட்டார்.

முன்னதாக சரத்பவாரின் மகள் சுப்ரியாவும் தொடர்ந்து அஜித்பவாருக்கு வாட்ஸ்அப் மூலம் தகவல்கள் அனுப்பியபடியே இருந்தார். குடும்பத்தைப் பிளவுபடுத்தி விடாதீர்கள் என்று அவர் கண்ணீர் மல்க வாட்ஸ்அப் தகவல்கள் அனுப்பியமை சமூக வலைதளங்களில் பரவி மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதுபோல சரத்பவாரின் பேரனும், எம்.எல்.ஏ.வுமான ரோகித் பவாரும் சமூக வலைதளங்கள் மூலம் அஜித் பவாருக்கு அழைப்பு விடுத்தப்படியே இருந்தார். குடும்ப உறுப்பினர்களின் இந்தப் பாசம் அஜித்பவாரின் மனதை உலுக்கி எடுத்து விட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை அஜித்பவாரை தெற்கு மும்பையில் உள்ள ஒரு ஹோட்டலில் தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் பிரபுல்பட்டேல் மற்றும் சரத்பவாரின் மருமகன் சதானந்தசுலே இருவரும் சந்தித்து பேசினார்கள். அப்போது சரத்பவார் மருமகன் பேசியமையைக் கேட்டு அஜித்பவார் கண்ணீர் விட்டார்.

இதைத் தொடர்ந்து சரத்பவாரின் மனைவி பிரதீபாவும் அஜித்பவாரிடம் போனில் பேசினார். அதன் பிறகே அஜித்பவார் நேரடியாக பட்னாவிஸைச் சந்தித்து தனது முடிவை மாற்றிக் கொண்டார் எனத் தெரிவித்தார். பிறகு துணை முதலமைச்சர் பதவியையும் ராஜினாமா செய்து குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

நேற்று முன்தினம் மதியத்திற்குப் பிறகு மாலை வரை அவரிடம் சரத்பவார் குடும்பத்தினர் தொடர்ந்து பேசியபடி இருந்தனர். சரத்பவாரை சந்திக்கும்படி கேட்டுக் கொண்டனர். இதையடுத்து நேற்று இரவு 9.20 மணிக்கு சரத்பவார் வீட்டுக்கு அஜித்பவார் சென்றார்.

சரத்பவாரிடம் கண்ணீர் விட்டு அழுதார். பிறகு தவறான முடிவு எடுத்ததற்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தச் சந்திப்பு மிகவும் உணர்ச்சிமயமாக இருந்ததாக சரத்பவார் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

**அஜித் பவார் - சரத் பவார்**

அஜித்பவாரை மன்னித்து சரத்பவார் ஏற்றுக் கொண்டமையால் குடும்பத்தில் ஏற்பட்ட சலசலப்பு முடிவுக்கு வந்தது. நேற்றுக் காலை தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுடன் அஜித்பவாரும் சட்டசபைக்கு வந்தார். தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுடன் சேர்ந்து அமர்ந்து இருந்தார்.

பிறகு அவர் சட்டசபையில் தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்றார். அவருக்கு தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இனி முக்கியத்துவம் அளிக்கப்படுமா என்பது தெரியவில்லை. ஆனால் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களும், எம்.எல்.ஏ.க்களும் அஜித்பவாரை முன்புபோல மரியாதை அளித்து வரவேற்று கௌரவித்து உள்ளனர். அஜித்பவாரின் வருகை தேசியவாத காங்கிரஸ் கட்சிக்கு வலிமை சேர்க்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

என்றாலும் அஜித்பவாருக்கு இனி சரத்பவார் முக்கியத்துவம் கொடுப்பாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அஜித்பவாருக்கு பதில் சரத்பவாரின் மகள் சுப்ரியாவின் கை இனி கட்சியில் ஓங்கும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.

# ஐ.எஸ். தலைவரைக் கொல்ல உதவிய மோப்ப நாய்க்கு விருது வழங்கிய டிரம்ப்



சிரியாவில் பதுங்கியிருந்த ஐ.எஸ். பயங்கரவாத இயக்க தலைவர் அல் பாக்தாதியை கடந்த மாதம் அமெரிக்க படைகள் கண்டுபிடித்து சுற்றி வளைத்தன.

தப்பிக்க வேறு வழியில்லாத நிலையில் அல் பாக்தாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்து உயிரிழந்தார். முன்னதாக, அல் பாக்தாதியின் மறைவிடத்தைக் கண்டுபிடிப்பதில் அமெரிக்க இராணுவத்தின் மோப்ப நாயான கோனன் முக்கிய பங்காற்றியது. அல் பாக்தாதியின் இருப்பிடத்தை மோப்பம் பிடித்து, அவரை விரட்டிச் சென்றது. ஆனால் பாக்தாதி வெடிகுண்டை வெடிக்க செய்ததில் நாய் காயமடைந்தது.

மோப்ப நாய் கோனனை வெகுவாக பாராட்டிய அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், பாக்தாதியை விரட்டியடித்து தற்கொலை செய்யத் தூண்டிய தீரமான நாய் இதுதான் என கூறி அதன் புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் குண்டு வெடிப்பு காயங்களில் இருந்து தேறிய மோப்ப நாய் கோனனை வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து டிரம்ப் விருது வழங்கி கௌரவித்தார்.

அதனை தொடர்ந்து, பத்திரிகையாளர்களுக்கு கோனனை அறிமுகம் செய்துவைத்து பேசிய டிரம்ப், இந்த மோப்ப நாயை, தான் நேசிக்கிறாா் எனத் தெரிவித்தார். மேலும் கோனன் உலகின் ஆகச்சிறந்த நாய்களுள் ஒன்றாக திகழ்வதாகவும், இது தமக்குப் பெருமையளிப்பதாகவும் அவர் கூறினார்.

# தமிழ் தலைமைகளின் சுயலாப அரசியலே தமிழர்களின் துன்பங்களுக்குக் காரணம்

## பி.பி.சி. பேட்டியில் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



இலங்கையில் புதிதாக உருவாகியுள்ள ஆட்சியின் ஊடாக இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவு முன்னரை விடவும் வலுவாக அமையும் எனத் தான் நம்புகிறார் எனக் கடல் தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கின்றார்.

பிபிசி தமிழுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக இலங்கை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில், இலங்கை தமிழர் பிரச்சனையை மிக இலகுவாக தீர்க்க முடியும் என டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987ஆம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தமே இலங்கை – இந்திய ஒப்பந்தமாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் வகையில் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண சபைகள் நிறுவப்பட்டன.

இதன்படி, தமிழர்களுக்கு வடகிழக்கு மாகாண சபை நிறுவப்பட்ட, பின்னர் அந்த மாகாண சபை முழுமையாக இயங்காமல் போனது.

இலங்கை முழுவதும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் நிர்வாக மொழிகளாக



இருக்க வேண்டும் என்பதும், சிங்கள மொழிகள் பேசும் பகுதிகளில் அரசின் பொதுப்பதிவேடுகள் மற்றும் அலுவல்கள் சிங்கள மொழியிலும், அவ்வாறே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஓர் அம்சமாக இருந்தது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பின்னரே 1988இல் இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டு வடகிழக்கு மாகாணம் அமைக்கப்பட்டது. எனினும், இந்த இணைப்பு செல்லாது என இலங்கை உயர் நீதிமன்றம் 2006இல் தீர்ப்பளித்த பின், 2007 முதல் மீண்டும் வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்களாக அவை பிரிக்கப்பட்டன.

### பிரச்சினைக்கான தீர்வு

இந்த பிரச்சினை தனியாக இலங்கை அரசாங்கத்தோடும், இந்திய அரசாங்கத்தோடும் மட்டும் தொடர்புப்பட்டதல்ல எனவும் இலங்கை தமிழ் மக்கள் தமது பிரதிநிதியாக யாரை தெரிவு செய்கின்றார்களோ, அவர்களிடமும் இந்த பிரச்சினைக்கான தீர்வு உள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பிருந்த இலங்கையின் நிலைமை வேறு எனவும், அதன் பின்னரான நிலைமை வேறு எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஏனெனில், அதற்கு பின்னர் ஆட்சி செய்த இலங்கை அரசாங்கங்களில் குணாம்ச ரீதியாக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனக் கூறிய டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் தலைமைகள் அதனைச் சரியான முறையில் கையாளவில்லை எனவும் கூறுகின்றார்.

தமிழ் மக்களின் தலைவர்கள் தமது மக்களின் நலன்களிலிருந்து இந்த பிரச்சனையை அணுகாது, தமது சுயலாப அரசியலில் இருந்து அணுகியமையே இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர்கள் துன்பங்களுக்கு ஆளாக காரணம் என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சினைக்கான சிறந்த தீர்வுத்திட்டம் என்ற போதிலும், அதனை தமிழ் தலைமைகள் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அவர் கவலை வெளியிடுகின்றார்.

தமிழர் பிரச்சினைக்குத் தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவே தீர்வைக் காண முடியும் எனக் கூறிய அவர், இந்த பிரச்சினைக்கான தீர்வை சர்வதேசத்தின் ஊடாகக் காண முடியும் என்ற நம்பிக்கை தனக்குக் கிடையாது எனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

முள்ளிவாய்க்காலுக்கே வராத சர்வதேசம், இனி இலங்கைக்கு வராது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

### யுத்தக் குற்றம் சுமத்தப்பட்டவர் தமிழர்களுக்கு உதவுவாரா?


தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கின்றார்.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் யுத்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டவரே தற்போது ஜனாதிபதியாகியுள்ள நிலையில், தமிழர்களுக்கு அவர் எவ்வாறு உதவுவார் என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்த யுத்தம், தமிழர்களை பெருமளவு பாதித்துள்ளதாகவும் அவர் நினைவூட்டினார்.

இந்த நிலையில், ஒரு தரப்பை மட்டும் இந்த விடயத்தில் குறைக்கூற முடியாது என அவர் கூறுகின்றார்.

அரசாங்கத்திற்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோரை, இல்லாது செய்வதற்கு அந்த அரசாங்



கம் நடவடிக்கை எடுப்பதே இயல்பான விடயம் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கை அரசாங்கத்தின் மீதும் தவறுகள் காணப்படுகின்றன எனக் கூறிய அவர், தமிழர்கள் மீதும் தவறுகள் உள்ளன எனக் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறாயினும், இரண்டு தரப்பின் மீதும் யுத்தக் குற்றம் சுமத்தப்பட வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கின்றார்.

இலங்கையை ஆட்சி செய்த அனைத்து அரசு தலைவர்களின் காலப் பகுதியிலும் தமிழர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

### இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வு

இந்த பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள இலங்கை வட பகுதி மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தத் தாம் தீர்மானித்துள்ளார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

இந்திய – இலங்கை மீனவப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனத் தான் நம்புகிறார் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இரண்டு நாட்டு மக்களின் நலன்களும் பாதிக்காத வகையிலும், இரண்டு நாட்டு கடற்றொழில் சமூகத்தின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்குடனும் தனது நடவடிக்கை அமையும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டார்.

### சூளைமேடு கொலை வழக்கு - டக்ளஸிற்கு இந்தியாவிற்கு செல்ல முடியுமா?

தமிழகம் – சூளைமேடு பகுதியில் 1986ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்றின் சந்தேக நபராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெயரும் உள்ளது.

அந்த வழக்கு விசாரணைகள் இன்றும் சென்னையில் இடம்பெற்று வருகின்ற நிலையில், டக்ளஸ் தேவானந்தா இந்தியாவிற்கு சென்றால் கைது செய்யப்படலாம் என கூறப்படுவது குறித்தும் அவரிடம் கேள்வி எழுப் பப்பட்டது.

இந்தியாவிற்கு சென்றால் தான் கைது செய்யப்படலாம் என்ற எந்தவித உத்தரவும் தனக்கு விடுக்கப்படவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

சூளைமேட்டுத் துப்பாக்கி பிரயோக சம்பவத்துடன் தனக்கு எந்த வித நேரடி தொடர்புகளும் கிடையாது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த சம்பவம் இடம்பெறும் காலப் பகுதியில் தான் ஈ.பி.ஆர். எல்.எவ். என்ற அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தினார் எனவும், அதனூடாகவே இந்தச் சம்பவத்தின் சந்தேக நபராகத் தனது பெயர் சேர்க்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

தான் சம்பவத்தின் பின்னரே அந்த இடத்திற்கு வருகைத்தந்தார் என்பது தமிழக பொலிஸாரின் முதல் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவிஜ்கின்றார்.

தனக்கு எந்தவொரு நேரத்திலும் இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

# கிளிநொச்சியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு!







கிளிநொச்சி, நவ. 28

தாயக விடுதலைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி – தர்மபுரம் பகுதியில் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மாவீரர் திரு உருவப் படத்துக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. அத்துடன் தாயக விடுதலைப்போரில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளும், சிறு நினைவுப் பொருளும் வழங்கப்பட்டன. (ஐ)

# மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திட இணங்கவில்லை

## தினேஸ் குணவர்த்தன கூறுகின்றார்



கொழும்பு, நவ. 28

மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திட இடைக்கால அரசு, இணக்கம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க அரசை மேற்கோள்காட்டி பரப்பப்பட்ட செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது, மிலேனியம் சவால்உடன்பாட்டில்கையெழுத்திடுவதற்குக் கடுமையான எதிர்ப்பு உள்ளது. எனவே, அதை மீண்டும் ஒரு முறை ஆராய வேண்டும்.

தேசத்துக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு உடன்பாட்டையும் நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்களால் ஓர் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மறந்து விடக்கூடாது.

எங்களுக்கு ஆபத்தான எந்தவொரு உடன்பாட்டையும் நாங்கள் செயற்படுத்த மாட்டோம். என்றும் அவர் கூறினார். (ஐ)

# முள்ளிவாய்க்காலில் துயிலுமில்லத்தை தயார்ப் படுத்தியவர்களிடம் விசாரணை

முல்லைத்தீவு, நவ. 28

முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர்களை நினைவு கொள்வதற்கான தயார்ப் படுத்தலில் ஈடுபட்டு வந்தவர்களில் 13 பேரை, முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதன்போது, அவர்களது பெயர்களைப் பதிவு செய்து விட்டு, விசாரணைகளின் பின்னர் விடுவித்துள்ளனர். (ஐ)

# கத்தோலிக்க தேவாலயத்தில் தீ!

கொழும்பு, நவ. 28

கற்பிட்டி – பள்ளிவாசல்துறைப் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் தீ ஏற்பட்டதால் அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று அதிகாலை இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டது.

தேவாலயத்தில் ஏற்றப்பட்டிருந்த விளக்கு தவறி விழுந்தே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதனால் கட்டடத்தின் சில பகுதிகளுக்கு மாத்திரமே பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

கொழும்பு, நவ. 28

இடைக்கால அரசு கடந்த வாரம் பதவிக்கு வந்த பின்னர், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் முதல்முறையாக நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

நீண்டநேரம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் மற்றும், அமைதியை நிலைநாட்டுவதற்கு எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முப்படைகளினதும் தளபதிகள் மற்றும் தேசிய பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். (ஐ)

# இணையதளச் செய்தி நிறுவனத்தில் பொலிஸார் புகுந்து தீவிர தேடுதல்!



கொழும்பு, நவ. 28

மீரிஹானவில் உள்ள Newshub.lk இணையத்தளச் செய்தி நிறுவனப் பணியகத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் காலை தேடுதல் நடத்தியுள்ளனர்.

வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான சான்றுப் பொருள்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த தேடுதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேடுதல் ஆணையின் படி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் அங்கு வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான எந்தச் சான்றுப் பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# சிட்னியிலும் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு



சிட்னி, நவ. 28

மாவீரர் நாள் நினைவுகூரல் நிகழ்வுகள் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

அங்கு நேற்றுக் காலை மாவீரர் எழில் கண்ணனின் பெற்றோர் பிரதான ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் பலரும் கலந்துகொண்டு மாவீரர்களுக்குப் பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ)



# ஆர்ச்சரிடம் மன்னிப்பு கோரியது நியூஸிலாந்து

நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது, இங்கிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர் ஜொப்ரா ஆர்ச்சரைப் பார்வையாளர் ஒருவர் இன ரீதியாக அவமதித்த சம்பவத்திற்காக, நியூஸிலாந்து கிரிக்கெட் சபை மன்னிப்பு கோரியுள்ளது.

மௌண்ட் மவுன்கனுயில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி நாளான திங்கள்கிழமை, இங்கிலாந்து அணி தங்களுடைய இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. இதன்போது களமிறங்கித் துடுப்பெடுத்தாடிய ஜொப்ரா ஆர்ச்சர் 30 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.




இதன்போது பார்வையாளர் ஒருவர் தன்னை நிறத்தைக் குறிப்பிட்டு வசைபாடினார் என ஜொப்ரா ஆர்ச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து அவர் குறிப்பிட்டிருந்தாவது, 'எனது அணியைக் காப்பாற்றத் துடுப்பெடுத்தாடி போராடி விட்டு ஆட்டம் இழந்து வெளியேறுகையில் எனக்கு தொந்தரவு அளிக்கும் வகையில் இனரீதியான விமர்சனத்தை எதிர்கொண் டேன்.

அந்த ஒருவரை தவிர இரசிகர்கள் அனைவரும் அருமையாக நடந்து கொண்டனர். வழக்கம் போல இங்கிலாந்து இரசிகர்கள் நல்ல ஊக்கம் அளித்தனர்' என்று தெரிவித்து இருந்தார்.

ஜொப்ரா ஆர்ச்சர் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்த நிலையில், அந்தச் சம்பவத்துக்காக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை மன்னிப்பு கோரியுள்ளது.

இது குறித்து நியூஸிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'முதல் டெஸ்ட் போட்டியில் ஜொப்ரா ஆர்ச்சரை இரசிகர் ஒருவர் வார்த்தையால் அவமரியாதை செய்தார் என எழுந்துள்ள புகார் எங்களுக்கு அதிர்ச்சியும், ஏமாற்றமும் அளிக்கிறது. இங்கிலாந்து கிரிக்கெட்டில் எங்களுக்கு எதிரியாக இருக் கலாம். ஆனாலும் அவர்கள் எங்களது நண்பர்கள்.

இனரீதியான அவமரியாதையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்காக ஜொப்ரா ஆர்ச்சரிடம் மன்னிப்பு கோருகிறோம். நியூஸிலாந்து கிரிக்கெட் சபை, ஜொப்ரா ஆர்ச்சரை தொடர்பு கொண்டு நடந்த சம்பவத்துக்காக மன்னிப்பு கேட்கும்.

இந்த குற்றத்தை செய்த ரசிகர் மைதானத்தை விட்டு உடனடியாக வெளியேறிவிட்டமையால் அவர் யார் என்பதைப் பாது காவலர்களால் கண்டறிய முடியவில்லை. நியூசிலாந்து கிரிக்கெட் சபை, விளையாட் டரங்கில் உள்ள கண்காணிப்புக் கமரா வின் பதிவுகளை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட நபர் யார் என்பதைக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கும்.

மைதானங்களில் அவமரியாதையான மற்றும் மோசமான வார்த்தையில் திட்டுவதை துளியும் அனுமதிக்க முடியாது. இந்த விசாரணையின் முன்னேற்றம் குறித்து பொலிஸிற்கு தகவல் தெரிவிக்கப்படும். ஜொப்ரா ஆர்ச்சருக்கு ஏற்பட்ட அனுபவம் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

ஹமில்டனில் நடைபெறும் அடுத்த டெஸ்ட் போட்டியில் இந்த விவகாரத்தில் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்படுவோம் என்று உறுதி அளிக்கிறோம்' கூறப்பட்டுள்ளது.

ஹமில்டனில் நடைபெறவுள்ள அடுத்தப் போட்டியில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, கண்காணிப்பினை அதிகப்படுத்தியுள்ளதாகவும் நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து தேசிய அணியில் விளையாடி வரும் ஜொப்ரா ஆர்ச்சர், பார்படோஸை பிறப்பிடமாக கொண்டவர் என்பதுடன், 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட்டை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்மித்தை நெருங்கும் கோஹ்லி

ஐ.சி.சி.யின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சதம் குவித்த இந்திய அணித் தலைவர் விராட் கோலி 3 புள்ளிகள் வித்தியாசத்தில் ஸ்மித்தை நெருங்கியுள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் ஸ்மித்திற்கும் விராட் கோஹ்லிக்கும் இடையில் கடும் போட்டி நிலவி வரும் நிலையில், ஆஸ் தொடரில் சிறப்பாக விளையாடியதன் மூலம் விராட் கோலியை பின்னுக்குத் தள்ளி ஸ்மித் முதலிடம் பிடித்தார்.

தென்னாபிரிக்கத் தொடரில் பெரியளவில் கோஹ்லி சோபிக்காததால், இருவருக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசம் அதிகரித்தது.

இந்நிலையில்இந்தியா பங்களாதேஷ்அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்டில் விராட் கோஹ்லி சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

அதேவேளையில் பாகிஸ்தானுக்கு எதிரான பிரிஸ்பேன் டெஸ்டில் ஸ்மித் ஏமாற்றம் அளித்தார்.

இந்நிலையில் ஐ.சி.சி. நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசையில் ஸ்டீவ் ஸ்மித் 931 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளார். விராட் கோஹ்லி 928 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார்.

29 ஆம் திகதி தொடங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது போட்டியிலும் ஸ்மித் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் விராட் கோஹ்லி முதல் இடத்தை பிடிக்க வாய்ப்புள்ளது.

பங்களாதேஷ் அணிக்கெதிராக இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் 700 புள்ளிகளுடன் மயங்க் அகர்வால் 10 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

புஜாரா 791 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலும், 759 புள்ளிகளுடன் ரகானே 5 ஆவது இடத்திலும்



# தேர்வாளர்களை மாற்ற கோருகிறார் ஹர்பஜன்

மேற்கிந்தியத் தீவுகள் தொடருக்கான இந்திய அணியில் இருந்து சஞ்சு சாம்சன் நீக்கப்பட்டமையால், தேர்வாளர்களை மாற்றுமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலியிடம் முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கெதிரான 'ருவென்ரி 20' தொடருக்கான இந்திய அணியில் சஞ்சு சாம்சன் இடம் பிடித்திருந்தார். ஆனால், அவர் மூன்று போட்டிகளிலும் களம் இறக்கப்படவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடருக்கான இந்திய அணி சில தினங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது.

15 பேர் கொண்ட இந்திய அணியில் சஞ்சு சாம்சனுக்கு இடம் கிடைக்கவில்லை. இதனால் தேர்வுக்குழு மீது முன்னாள் வீரர்கள் மற்றும் விமர்சகர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சசி தரூர், அவரது டுவிட்டர் பக்கத்தில் வாய்ப்பு ஏதும் கொடுக்காமல் சஞ்சு சாம்சன் நீக்கப்பட்டமை மிகப்பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. அவர் மூன்று போட்டிகளில் தண்ணீர் போத்தல் தான் சுமந்து சென்றார்.

அதன்பின் உடனடியாக



நீக்கப்பட்டுள்ளார். அவர்கள் சஞ்சு சாம்சனின் துடுப்பாட்டத்தைச் சோதிக்கிறார்களா? அல்லது அவருடைய இதயத்தையா? – எனப் பதிவிட்டுள்ளார்.

இதற்கு ஹர்பஜன் சிங் தனது டுவிட்டர் பக்கத்தில் "அவர்கள் சஞ்சு சாம்சனின் இதயத்தை சோதிக்கிறார்கள் என்று யூகிக்கிறேன். தேர்வுக்குழு மாற்றப்பட்டு வலுவான நபர்கள் அங்கே இருக்க வேண்டும். கங்குலி தேவையானவைகளை செய்வார் என்று நம்புகிறேன்." – என்று பதில் அளித்துள்ளார்.

# மாவீரர்களை அஞ்சலிக்க எள்ளங்குளத்திலும் தடை!





யாழ்ப்பாணம், நவ. 28

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ள பகுதியில் மாவீரர்களுக்குச் சுடரேற்ற முற்பட்டபோது இராணுவத்தினர் அதனைத் தடுத்தி நிறுத்தினர்.

பின்னர் இராணுவ முகாமுக்கு அருகில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்,கே. சிவாஜிலிங்கம் தலைமையில் வட மராட்சி எள்ளங்குளம் துயிலுமில்லம் அமைந்துள்ள பகுதியில் சுடரேற்ற முற்பட்டபோது, இராணுவத்னர் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

அதன் பின்னர் துயிலுமில்லத்துக்கு அருகில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமராட்சி எள்ளங்குளம் துயிலும்இல்லம்இடித்தழிக்கப்பட்டு அங்கு படையினர் இராணுவ முகாமை அமைத்துள்ளனர்.

# இலங்கை 2 நாடுகளாகப் பிரிந்துசெல்ல சார்வதேச நாடுகள் இடம் தரவேண்டும்!

## சிவமோகன் எம்.பி. கோரிக்கை



முல்லைத்தீவு, நவ. 28

இந்த தேசம் இரண்டாகப் பிரிந்து இரண்டு நாடுகள் என்ற பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு சார்வதேச நாடுகள் இடம்தரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்துள்ளார்

ஒட்டுசுட்டான் பகுதியில் விமானத் தாக்குதலில் உயிரிழந்த பன்னிரு மக்களின் 29 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று ஒட்டு சுட்டானில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அன்று அந்த மக்கள் மாவீரர் தினத்தன்று தங்கள் உறவுகளை நினைவேந்தல் செய்வதற்காக சென்றவேளை ஶ்ரீலங்கா விமானப்படையினரால் தாக்குதல் நடத்திப் பலி கொள்ளப்பட்ட இடத்தில் நாங்கள் நினைவிற் கொள்கின்றோம். ஒரு நாடு தன்னுடைய நாட்டு மக்களுக்கு எதிராகவே விமானங்களைப் பாவித்து தாக்குதல் நடத்திய வரலாறு 1990 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இந்த நாட்டிற்காக உயிரிழந்தவர்களை நினைவேந்தல் செய்வதற்கு உரிய உரித்து தமிழ் மக்களுக்கு இல்லையா?

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கொழும்பில் பேச்சு நடத்தினீர்கள். திம்புவில் பேச்சு நடத்தினீர்கள். ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒரே மேசையில் பேச்சு நடத்தினீர்கள். எனவே நீங்கள் அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். தமிழர்களின் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளையும் சிங்கள தேசத்தின் பிரதிநிதிகளாக சிங்கள அரசையும் ஏற்றுக்கொண்டுதான் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பது மறக்க முடியாத உண்மை. இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரை உச்சரித்தால், அவர்களின் அடையாளங்களைச் சொன்னால் நாங்கள் மிரட்டப்படுகின்றோம்.

ஒரு புதிய அரசு இன்று ஆட்சியை ஏற்றிருக்கின்றது. அவர்களது அடாவடித்தனங்கள் வெளியில் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த தேசம் இரண்டாகப் பிரிந்து இரண்டு நாடுகள் என்ற பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு சார்வதேச நாடுகள் இடம்தரவேண்டும். ஏன் என்றால் சர்வதேசம் தான் சமாதானப் பேச்சு என்ற போர்வையில் ஈழவிடுதலைப்போராட்டத்தை முள்ளிவாய்க்கால் வரை முடிவுக்கு கொண்டுவந்தது. உங்களுக்கு அந்தப் பொறுப்பு இருக்கின்றது என்று கொள்ளலாம்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பது பகிரங்கமான உண்மை. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு இந்த மக்களுக்காக சர்வதேச நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஐ.நா. சபையின் ஊடாக ஒரு தீர்விற்கு வரவேண்டும் – என்றார். (ஐ)

# ஒட்டுசுட்டான் விமானக் குண்டுவீச்சில் உயிரிழந்த 12 பொதுமக்களுக்கு அஞ்சலி





முல்லைத்தீவு, நவ. 28


1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 பொது மக்களின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவுகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா பிரேமகாந்த, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

முன்னதாகப் பொதுச்சுடரை இந்தத் தாக்குதலில் உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் உறவினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் ஆகியோர் இணைந்து ஏற்றிவைக்க அதனைத் தொடர்ந்து அனைத்து உறவுகளுக்கும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர்வணக்கம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல்வேறு தரப்பினரும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். (ஐ)




வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# தடைகளைத் தகர்த்தெறிந்து மாவீரர்களை நினைவேந்தினர் யாழ். பல்கலை மாணவர்!

## மலர் தூவி சுடரேற்றி உணர்வுபூர்வ அஞ்சலி















(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 28

தடைகளைத் தகர்த்தெறிந்து யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்த மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவாலயத்தில் மாவீரர்களுக்கு மலர் தூவி, தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நினைவேந்தல் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் நேற்றும் இன்றும் பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அங்கு தீவிர பாதுகாப்பு, கண்காணிப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும், இன்று முற்பகல் 10 மணி முதல் பல்கலைக்கழக வாயிலில் திரண்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து நினைவேந்தலை நடத்த முயன்றனர்.

இதன்போது அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கதவுகளைப் பூட்டி மாணவர்கள் உட்செல்ல முடியாதவாறு தடுத்தனர்.

ஆனால், அங்கு குவிந்த மாணவர்கள் தடைகளை உடைத்துக்கொண்டு பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து மாவீரர் நினைவேந்தலை நடத்தினர்.

(ஐ - 07)





ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில்....





மட்டக்களப்பு மாவடி முன்மாரி துயிலும் இல்லத்தில்....




இரணைப்பாலை துயிலும் இல்லத்தில்..........



வவுனியா ஈச்சங்குளத்தில்.......





கனகபுரம் துயிலும் இல்லத்தில்......





முழங்காவில் துயிலும் இல்லத்தில்.....




முல்லைத்தீவு ஆலங்குளம் துயிலும் இல்லத்தில்.....





பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில்.....





தீருவில் திடலில்........




வாகரை கண்டலடி துயிலும் இல்லத்தில்......





வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில்...........

















**கோப்பாய் துயிலும் இல்லத்தில்.....**







**கொடிகாமம் துயிலும் இல்லத்தில்.....**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2019 இல் வெளியிடப்பெற்றது.